
# 1. இன்று நேரு வாழ்வது....



அருமை நேரு பிறந்தது
அலகா பாத்து நகரிலே.
இளைஞர் நேரு படித்தது
இங்கி லாந்து நாட்டிலே.
தீரர் நேரு வாழ்ந்தது
தில்லி நகரம் தன்னிலே.
இன்று நேரு வாழ்வது
எங்கள் பிஞ்சு நெஞ்சிலே!

# 3. பிறந்த நாள்

குழந்தை யெல்லாம் கூடுவோம்;
கூடிக் குதித்தே ஆடுவோம்;
மழலை மொழியில் பாடுவோம்;
மகிழ்ந்து தாளம் போடுவோம்.
“குழந்தை யோடு பழகவும்,
குழந்தை யோடு பேசவும்,
குழந்தை யோடு ஆடவும்
கொள்ளை ஆசை உள்ளது.’’



என்று சொன்ன நேருவை
இந்த நாடு பெற்ற நாள்.
என்றும் நமது நெஞ்சிலே
இருக்கும் நேரு பிறந்த
நாள்.

‘எனது பிறந்த நாளையே
இன்ப மூட்டும் குழந்தைகள்
தினமாய்க் கொள்வோம்’ என்ற
நம்
தேசத் தலைவர் பிறந்தநாள்.

# 4. சின்னப் பையன்



கங்கை, யமுனை, சரஸ்வதி
கலக்கும் இடத்தில் உள்ளது,
எங்கள் நேரு பிறந்ததாம்
இனிய நகரம் அலகாபாத்.

வருவாய் மிகவும் உடையவர்;
வக்கீல் தொழிலில் சிறந்தவர்;
அருமை நேரு தந்தையார்;
அவரின் பெயரே மோதிலால்.

பண்பு மிகுந்த அம்மையார்;
பழகுதற்கே இனியவர்;
அன்புமிக்க நேருவின்
அன்னை சொரூபராணியாம்.

# 5. நவம்பர் 14




நவம்பர் மாதம் பதினான்கு
நல்ல நாளாம் நாட்டிற்கு.
ஜவஹர் பிறந்தது அந்நாளே.
சகலரும் போற்றும் பொன்னாளே!

பிறந்த நாளில் ஜவஹர்லால்
பெரிதும் மகிழ்ச்சி கொண்டிடுவார்.
உறவினர் எல்லாம் அவர் வீட்டில்
உற்சாகத்துடன் கூடிடுவார்.



எடுத்தார் ஒன்றைக் கையிலே.

என்ன செய்தார் அதனையே?

படிக்கும் அறையில் வைத்தனர்;

பாய்ந்து வெளியே சென்றனர்.

வெளியில் சென்ற தந்தையார்

வீடு திரும்பி வந்தனர்.

களைத்து வந்த அவருமே

கண்டார் பேனா ஒன்றையே!

“இரண்டு பேனா இருந்தன;

எங்கே ஒன்று போனது?”

குரலில் கடுமை தெரிந்தது.

கோபம் பொங்கி வழிந்தது.